மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46 திரு. ம. தனபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

46—

திருப்போரூர் வரை பேருந்துகள் இயக்குதல்

*37148—**திரு. ம. தனபால்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :—

கேளம்பாக்கம் வரை இயக்கப்படும் பல்லவன் பேருந்துகளைத் திருப்போரூர் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்போரூர் பகுதி, சென்னை, பெருநகர் பல்லவன் போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியாகும். எனவே, பல்லவன் போக்குவரத்துக்கழகம் கேளம்பாக்கம் வரை இயக்கும் பேருந்துகளை, திருப்போரூர் பகுதி வரை நீட்டித்து இயக்க இயலாது.

முற்பகல் *10–30*

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பட்டிதொட்டிகளிலெல்லாம் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கின்ற அரசுதான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு. அந்தவகையிலே, மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்கின்றபொழுது போக்குவரத்து வசதிகளை இன்றைக்கு உருவாக்கித் தந்து கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும், திருப்போரூர் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டிருக்கிறது என்பதனாலேதான் இங்கே அதை அரசு தளர்த்தி ஆணையிட வேண்டுமென்பதற்காக நான் இந்தக் கேள்வியை உருவாக்கியிருக்கின்றேன். திருப்போரூர் என்று சொன்னால், அருள்மிகு முருகப் பெருமான் திருக்கோயில்—புண்ணியஸ்தலம் அமையப்பெற்ற இடம், புகழ் பெற்ற இடம், தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசிக்க . . . .

1995 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருப்போரூரில் முருகன் இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் சொல்லிதான் தெரிய வேண்டுமென்பதில்லை. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ம. தனபால்: திருப்போரூர் நகரத்தைச் சுற்றியுள்ள கிட்டத்தட்ட ஐம்பது கிராமங்கள்; அதுமட்டுமல்லாது மூன்று இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய இடம். தினந்தோறும் நான்காயிரம், ஐந்தாயிரம் மக்கள் சென்னைக்குச் செல்லக்கூடிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நகரம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்திலே கூட நாவலூர் வரை வந்திருந்த பேருந்தை எல்லைக்கு அப்பாற்பட்டுத்தான் கேளம்பாக்கம்—அன்றைக்கு அரசாணை தளர்த்தப்பட்டு கேளம்பாக்கம்-- வரை விடப்பட்டது. அதேபோன்று, இன்றைக்கு மக்கள் நலன் கருதி இதனை அரசாணை பிறப்பித்துத் தளர்த்தி திருப்போரூர் வரை பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விடுவதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி வேண்டாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சைதாப்பேட்டையிலிருந்து கேளம்பாக்கம் வரையிலும் 18, 19-பி ஐந்து நடைகளும், 68-ஆர் கேளம்பாக்கம் வரையிலும். நான்கு நடைகளும், பிராட்வேயிலிருந்து கேளம்பாக்கம் வரையிலும் 21-ஆர் ஒன்பது நடைகளும், வடபழனியிலிருந்து 68-ஜே என்ற பேருந்து கேளம்பாக்கம் வரையிலும் இரண்டு நடைகளும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். இதுவே ஏறத்தாழ 39 கிலோ மீட்டர் நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அரசிலே இருக்கிற விதிமுறைகளின் அடிப்படையில் நகரப் பேருந்துகள் 30 கிலோமீட்டருக்கு மேலே இயக்கக் கூடாது என்ற விதிமுறைகள் இருந்தாலும்கூட, சென்னைப் பெருநகரம் வளர்ந்து கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இதுபோன்று 39 கிலோ மீட்டர் வரையிலும் நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். திருப்போரூர் வரை இயக்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ கூடுதலாக 10 கிலோ மீட்டர் இயக்க வேண்டியிருக்கிறது. 49 கிலோ மீட்டர் இயக்குவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். சென்னை மாநகரத்திலே நாம் பார்க்கின்றபொழுது ஏறத்தாழ சுமார் 60 இலட்சம் மக்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கே போதுமான அளவிற்குப்

பேருந்துகளை இயக்குவதில் கடினமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் இதுபோன்று நீட்டிப்புகள் எங்களால் இயலவில்லை என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தூரத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அடையாறிலிருந்து திருப்போரூர் வரை இயக்கினால் 27 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அது பல்லவன் போக்குவரத்துக் கழக விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கும் என்பதினாலே மீண்டும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைப் பெருநகரத்திற்கு மட்டும்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக இருந்தாலும் கூட அந்த விதிகளைத் தளர்த்தி அந்தப் பகுதியிலே நாங்கள் பேருந்துகளை 39 கிலோமீட்டர் இயக்கிக் கொணடிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அதை டாக்டர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அந்தப் பகுதியிலே பேருந்துகள்—நகரப் பேருந்துகள்- இயக்குகின்ற காரணத்தினாலே அது தேவைய்யில்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

47—

கொடுமுடியாறு அணை கட்டுமானப் பணியின் நிலை

*24532—**திருமதி ரமணி நல்லதம்பி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கொடுமுடியாறு அணை கட்டுமானப் பணியின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் 16 கோடியே 24 இலட்சம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS